# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**
சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா | 9-00 |
| 6 மாத | ,, | 4-50 |
| 3 மாத | ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஆனி மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 22-ம் இல.


# புதிய அரசாங்கத்துக்கு

## கத்தோலிக்கரின் பூரண ஒத்துழைப்பு

1970-ம் ஆண்டு ஆட்சி மன்றத் தேர்தல் வெற்றியை மக்களின் வெற்றித் தினமாக இம்மாதம் 14-ம் திகதி இலங்கையின் புதிய பாராளுமன்றத் திறப்புத் தினமன்று கொண்டாடப்பட்டது. அத்தினத்துக்கு முத்தியநாள் இலங்கை மேற்றிராணிமாரின் சார்பாகக் கருதினல் கூரே அடிகளார் இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு விடுத்த செய்தியில் புதிய அரசாங்கத்துக்கு கத்தோலிக்க மக்கள் உண்மையான, மனப்பூர்வமான ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரது செய்தியின் சுருக்கம் பின்வருமாறு: புதிய அரசாங்கம், புதிய பாராளுமன்றத் திறப்புத் தினத்தின்போது சகல மக்களது செபங்களையும் கேட்டிருக்கின்றது, எவ்வரசாங்கமும் திறமையுடன் செயலாற்றத் தேவனது உதவி வேண்டும். சுதந்தர ஆட்சி எமது நாட்டில் ஆரம்ப நிலையிலிருக்கும் இக்காலத்தில் திறமையான ஆட்சி வேண்டும். ஆகவே, இந்நாட்டுச் சகல மக்களுடனும் சேர்ந்து எமது நாட்டுக்குத் திறமையான ஆட்சியை அருள வேண்டுமென்று இத்தினத்திலும்; எப்போதும் கத்தோலிக்கர்கள் தேவனிடம் பிரார்த்திக்க வேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். கத்தோலிக்க திருச்சபை எந்தக் கட்சியையும் தமது கட்சியாக ஆதரிப்பதில்லை. ஆனால், முறைப்படியான தேர்தல் முடிந்ததும் ஆளும் கட்சிக்கு தனது மனமார்ந்த பூரண ஆத

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# பட்சி மாதா சுரூபம்

பிரான்ஸ் தேச றியோம் நகரிலே பட்சி மாதா சுரூபமென ஓர் அபூர்வ சுரூபம் இருந்துவருகிறது. இதுபற்றிய சரிதை வருமாறு: ஒருமுறை அங்கு ஒரு மனிதன் அநீதியாக மரண தண்டனை விதிக்கப்பட்டான். அவனோ தேவமாதாவிலே நம்பிக்கை வைத்துக் கழுவேற்றப்படும் நாளை எதிர்பார்த்துக் கொண்டு, ஒரு பட்சியுடன் திருக்குழந்தை யேசு விளையாடும் பாவனையாக மாதாவின் சுரூபம் ஒன்றைக் கொத்துவேலை செய்வதில் கருத்தாயிருந்தான்.

அவன் கழுவேற்றப் படுவதற்கு முதனாள் அச் சிறைச்சாலையினூடாக அவனுக்கு மரண தண்டனை விதித்த நீதியரசர் சென்றபோது அந்தச் சிறைக் கைதி சிறந்த கைவேலைப்பாடுள்ள ஒரு மாதா சுரூபத்தைக் கொத்தி வேலை செய்துகொண்டிருப்பதைக் கவனித்துப் பிரமித்தவராய், "உன்னுடைய சுரூபத்தைக் கொத்தி முடிக்க எவ்வளவு காலம் பிடிக்கும்?" என்று அவனைக் கேட்டார். "இரண்டுவாரங்கள் ஐயா" என்று அவன் பதிலளித்தான். அவர் இதைக் கேட்டதும் அவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றும் காலத்தை இரண்டு வாரங்களுக்குப் பின்போட வேண்டுமென்று சிறைச்சாலை அதிகாரிக்குக் கட்டளை கொடுத்தார்.

ஆனால், ஒரு வாரத்தின் பின் உண்மையான குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டான். அந்தச் சிறைக் கைதியும் கூண்டிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஒரு பட்சியைப்போல் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுத் தேவதாயாருக்கு நன்றி கூறிக்கொண்டு சந்தோஷத்துடன் வெளியேறினான். அவன் கொத்திய அழகான மாதா சுரூபம் இன்று றியோம் நகரிலுள்ள புனித மார்த்தூறெற்றின் கோவிலில் இருந்துவருகிறது.

### மத்திய கிழக்கில் சமாதானத்துக்கு

## கூட்டுப் பிரார்த்தனை

மத்திய கிழக்கில் இஸ்றவேல்-அரபுநாடுகளின் யுத்த நிலையினால் உலக சமாதானத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைத் தேவன் நீக்கியருள சென்ற வாரம் சகல கிறீஸ்தவ சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய பல நூற்றுக்கணக்கானவர்கள் லண்டன்நகரில் புனித சின்னப்பர் தேவாலயத்தில் கூடிச் செபித்தனர். அரபிய, எபிரேய, கிரேக்க, லத்தீனிய, ருஷிய, அர்மீனிய, ஆங்கில பாஷைகளில் பிரசங்கங்களும் ஆசீர்வாதங்களும் அருளப்பட்டன.

# கீழ்மாகாணத்தில் தேவதாயார் பத்திச்சபையினர் ஒன்றுகூடினர்

கீழ்மாகாணத்தில் பல பகுதிகளிலும் தொண்டு செய்துவரும் தேவதாயார் பத்திச் சபைகள் சென்ற மாதம் 19-ம், 29-ம் திகதிகளில் மட்டுநகர் புனித மைக்கேல் கல்லூரி மன்றத்தில் தமது வருடாந்தக் கூட்டங்களுக்காக ஒன்று கூடினர். போக்கு வரவு வசதியீனங்களைப் பொருட்படுத்தாது பல் மைல் தூரத்திலுமிருந்து அங்கத்தினர்கள் பெருந் தொகையாகச் சமுகம் அளித்திருந்தனர். அக் கூட்டங்களில் நடந்த பேச்சுக்கள் ஆன்ம, சமூக, பொருளாதார விஷயங்களை அடக்கின. பலவகைப் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றதனால் கூட்டங்கள் ஆரவார முடையனவாயின. கூட்டங்கள் ஆரம்பமாகு முன் மகா வந். கிளெனி ஆண்டவரால் சபைப்பரிபாலகர் சுவாமியாருடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மேற்றிராணியார் கூட்டங்களின்போது பல யோசனைகளையும் கொடுத்து உதவினார். இறுதிநாள் கூட்டங்கள் பரிசளிப்புடனும், திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும் முடிவடைந்தன.

# பட்டினத்தைக் காப்பாற்றிய திராட்சைப் பானம்

1631-ம் ஆண்டு முப்பது வருடகால யுத்தத்திலே ரில்லி என்ற பிரான்சிய ஜெனறல் ஜேர்மனியிலுள்ள றொதென்பேர்க் நகரை அடிப்படுத்தினான். அக்கால வழமையைத் தொடர்ந்து அவர் அந்த நகரை அழிக்க விருந்தார், ஆனால். அந்நகர நீதிபதியான நஸ்ச் என்பவர் அவ்வாறு செய்யாது அவரிடம் பரிந்து பேசி, அங்கு தானே வடிக்கப்பட்ட ஒரு கிளாஸ் நேர்த்தியான திராட்சை ரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்.

அப்பொழுது அங்கு மேசை மீது மிகப்பெரிய கிண்ணம் இருந்தது. அதனுள் மூன்றரைலிற்றர் திராட்சை ரசம் இருந்தது. திராட்சை ரசத்தைக் குடித்தபின் உண்டான மகிழ்ச்சிப் பெருக்கால் அந்த ஜெனறல் ஒரு சவால் விடுத்தார். கிண்ணத்திலுள்ள அவ்வளவு திராட்சை ரசத்தையும் எந்த ஒரு மனிதனாவது ஒரே தடவையில் குடித்தால் றொதென்பேர்க் நகரை அழிக்கமாட்டேனென வாக்களித்தார். இதைக்கேட்ட நீதிபதி நஸ்ச் ஓர் ஆழ்ந்த மூச்சு விட்டார். அந்தக் கிண்ணத்தை ஒரே மூச்சில் வெறுமையாக்கிவிட்டார். அங்கு சந்தைத்தலத்திலுள்ள பேரான கடிகாரம் தினமும் 12 மணிக்குப் பாவைக் கூத்தாடிகளைக் கொண்டு இந்த நாடகத்தைத் திரும்பத்திரும்ப நடித்துக் காட்டுகின்றது. அத்துடன் வருடந்தோறும் பாஸ்குத்திருநாளுக்குப் பின்வரும் ஏழாம் ஞாயிற்றுக் கிழமையன்று இந்தப் பெருங் குடிகாரனின் ஞாபக விழாவை அப்பட்டினவாசிகள் பெருங் குதூகலத்துடன் கொண்டாடிவருகிறார்கள்.

# பிதாப்பிதா வஸ்கனுடன் வத்திக்கானின் உடன்படிக்கை

சென்றமாதம் ஆர்மீனியன் கிறிஸ்தவசபைப் பிதாப்பிதா 1-ம் வஸ்கன் அடிகளார் வத்திக்கான் சென்று, பரி. தந்தையைத் தரிசித்து அங்கு 4 நாட்கள் தங்கி தமது நாடுதிரும்பிவிட்டார். அவர் வத்திக்கானில் தங்கியிருந்த காலத்தில் தான் அனுபவித்த ஆன்மசாந்தியைப் போல் ஒருபோதும் முன் அனுபவித்ததில்லையெனக் கூறியிருக்கிறார். வத்திக்கானில் தான் தங்கியிருந்த 4 நாட்களும் ஆர்மீனிய கிறிஸ்தவ சபையின் சரித்திரத்திலே ஒரு புதியதிருப்பத்தை அளித்திருப்பதாகவும் அவர் பகர்ந்தார். பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரும் வஸ்கன் அடிகளாரின் வத்திக்கான் விஜயம் இரு கிறிஸ்தவ சபைகளும் ஒன்றாகும் நிலைமையைக் கிட்டக் கொண்டு வந்திருக்கிறதெனக் கூறியுள்ளார். வஸ்கன் அடிகளார் தன் நாடு திரும்புமுன் வத்திக்கானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் உலக சமாதானத்துக் காகவும், கிறிஸ்தவ சபைகள் ஒரு தலைவரின் கீழ் ஒருமிப்பதற்காகவும் வருங்காலத்தில் இருசாராரும் கையாள இருக்கும் முறைகள் திட்டவட்டமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன எனச் செய்திகள் கூறுகின்றன.

### நத்தார் காலத்தில்

## ஜி. சி. ஈ. பரீட்சை இல்லை

சென்ற வருடம் ஜி. சி. ஈ பரீட்சை மார்கழி மாதம் 24-ம், 25-ம், 26-ம் தேதிகளில் நடைபெற இருந்ததையும், அத்தேதிகள் கிறீஸ்தவ மாணவர்களுக்கு உகந்தது அல்ல என இலங்கைக் கத்தோலிக்கரின் சார்பாக ஃ கொழும்பு அதிமேற்றிராசன துணை ஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளார் கல்வி அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தும் அவர் விண்ணப்பம் அப்போது கவனியாது விடப்பட்டதையும் நேயர்கள் அறிவர். இக்குறை இப்போது நிவிர்த்தி செய்யப்பட்டு விட்டது. மார்கழி 24, 25, 26-ம் தேதிகளில் ஜி சி. ஈ. பரீட்சை எதுவும் நடாத்தப்பட மாட்டாதெனக் கல்வி அமைச்சு, ஆயர் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளாருக்கு அறிவித்திருக்கின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி B.A.

— சி. ஏ. செல்வராசா

அந்தோனிப்பிள்ளை அண்ணர், கத்திதீட்டும் தீட்டுக்கட்டையை ஆசனமாக்கி, அதில் அமர்ந்து கொண்டு, அமலி பிடிபிடியாய் அள்ளிக்கொடுத்த வெங்காயத்தை, செங்குத்தாக கட்டப்பட்டிருக்கும் பூவரசம்தடியில் பிடிபிடியாய் கட்டிக்கொண்டு இருக்கிறார். ஏற்கனவே கட்டப்பட்ட வெங்காயங்கள், வீட்டின்பின் விறாந்தையில் தலைநிமிர்ந்து நிற்கின்றன. மருதித்தூண்கள் போல் அவை நிற்கும் அழகு?... நீர்மட்டம் பிடித்துத்தான் கட்டும் மேஸ்திரிகூட இவ்வளவு அழகாக — ஒழுங்காகக் கட்டமாட்டான் — முடியாது.

அந்தோனிப்பிள்ளை அண்ணன் என்ன குறைந்த மனிசனா? வெங்காயம் — புகையிலை இவற்றின் தந்தை என்று கூட சொல்லலாம். அவருக்கு என்று உள்ளது நாற்பது பட்டித்தரை மட்டும்தான். ஆனால், அதைவிட எண்பது பட்டிநிலம் குத்தகைக்கு எடுத்து, வருடாவருடம் வெங்காயமும் — புகையிலையும், கட்டு, உடலை — ஏன் உயிரையே உரமிட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத்தான் இந்த ஏழெட்டுப் பிள்ளைகளையும் வளர்த்தார் — படிப்பித்தார் — ஆளாக்கினார்.

அவரின் பாதங்கள் உழைப்பின் சாட்சியாக வளைந்தும் நெளிந்தும் இருக்கிறது. அவரின் உள்ளங்கையில் ஆணி அறைந்தாலும் ஏறாது. அது உழைப்பின் சின்னம். அவரின் உடல் கறுத்து முறுகி — திரண்டு காணப்படுவது எப்படி? உழைப்பு அவருக்கு அளித்த பரிசு அது. அவர் இடையில் சுற்றியிருக்கும் நாலுமுழ வேட்டி சிவப்பு மண் காவிஏறி, அங்குமிங்கும் தையல் போட்டிருப்பது வறுமையின் கோலம்.

இந்த ஒரு சாண் வயிற்றை நிரப்ப இந்த மனிதனுக்கு எத்தனைபாடு — இன்னல் — கஷ்டம். உலகம் என்றசக்கரம் பசி என்ற அச்சாணியில் சுற்றுகிறது. ஆனால், உழைக்காமல் உண்ணும் பெருச்சாளிகள் இந்தச் சமுதாயத்தில் இருக்கிறார்கள். இவர்களுக்கு அந்தோனிப்பிள்ளை அண்ணர் ஓர் கனத்த சம்மட்டி! அந்தோனிப்பிள்ளை அண்ணனின் மனைவி மரியமுத்து, வீட்டின் முற்றத்தில் இருக்கும் பலாமரத்தின் கீழ் இருந்து மறுநாள் சந்தைக்கு கொண்டு போவதற்கு வெங்காயம் தெரிகிறாள். வாய் அகன்ற அந்த நார்ப்பெட்டி வெங்காயத்தை எதிர்பார்த்து ஆவென்றபடி இருக்கிறது. அப் பலாமரத்தில் இருந்து ஓர் அணில் வாலை உயர்த்தி உயர்த்தி தன் மொழியில் ஏதோ சொல்கிறது. அது ஆறு அறிவு உடைய மரியமுத்துவுக்குப் புரிய நியதியில்லை. 'டைகர்' என்ற அந்த நாய்க்குப் புரிந்ததோ? அந்த நாய் துள்ளிக் குதிக்கிறது. வாழ்வின் உயர்ந்த படியில் இருப்பவர்கள் தாழ்ந்தபடியில் இருப்பவர்களை ஏளனம்செய்வது ஏன்? ஏழையின் கொதிக்கும் இதயத்துக்குப் பலியான பணக்காரர்கள் ஆயிரமாயிரம். இதை இந்த உயர்ந்த படியில் இருப்பவர்கள் உணரவில்லையா? ஏன்?

"அமலி... கண்டை அவிழ்த்துவிடு..." மாட்டுக் கட்டையில் இருந்து புஷ்பமலர் குரல் கொடுக்கிறாள். அமலி கண்டை அவிழ்த்து விடுகிறாள்.

கன்று தாய்ப்பசுவின் மடியைத் தன் பலம்கொண்ட மட்டும் மோதுகிறது. அந்தோனிப்பிள்ளை அண்ணனின் குடும்பமும் இப்படித்தான். உலகத்தில் எதையோ இழந்துவிட்டு, அதையடைய உலகத்துடன் முட்டி மோதுகிறது.

புஷ்பமலருக்கு வயது இருபத்தாறு; ஆனால், அவள் இதுவரை தன் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தது இல்லை.

அமலிக்கு இருபத்திமூன்று வயது. எஸ். எஸ். சி. வரை படித்துவிட்டு இருக்கிறாள்.

ஜெயமலர் அடுப்படியில் ஏதோவேலையாக இருக்கிறாள். அவளின் அரைப்பாவாடை செம்பாட்டு மண்ணில் துவைத்து, நைந்து வதங்கிப்போய் இருக்கிறது. அவளுக்கு என்று உள்ளது மூன்று பாவாடைகள்தானே. ஊரில் இருபதுவயதுப் பெண்பிள்ளைகள் எப்படியெல்லாம் இருக்கிறார்கள்? உடுக்கிறார்கள்?? நடக்கிறார்கள்??? அவளுக்கு அதைப்பற்றியெல்லாம் கவலை இல்லை; கவலைப்படத்தான் முடியுமா? அப்படிக் கவலைப்பட்டு என்ன செய்ய முடியும்? இராசமலர் வீட்டு ஓட்டுக்கு மேல் கிழித்துப்போட்ட புழுக்கொடியலை எடுப்பதில் மூனைந்திருக்கிறாள். பதினைந்துவயதில் பள்ளிப் படிப்பிற்கு முழுக்குப் போட்டுவிட்டு, உலகப் பள்ளியில் வாழ்க்கைப் பாடம் படிக்கிறாள்.

இராணிமலர், எலிமிஞ்சை மாத்தின்கீழ் முதல் நாள் புதைத்துவைத்த மரவள்ளிக் கிழங்கைத் தோண்டுகிறாள். அவள்படிப்பில் கெட்டிக்காரி. பன்னிரண்டு வயது. இப்போது எட்டாம் வகுப்பு படிக்கிறாள். அவளுடைய நாலு கோழியின் வருவாயில், அவள் பள்ளிவாழ்க்கை ஓடுகிறது.

கடசிப்பிள்ளைகள் இருவரும் சிறியவர்கள். ஒன்று பெண், மற்றது ஆண். புகைக்குடிலின் பக்கத்தில், பாவட்டம்செடியோரத்தில் அப்பா அம்மா விளையாடுகிறார்கள். அவர்களுக்குக் குடும்பத்தைப்பற்றி என்னகவலை? எல்லோருமே குழந்தைகளாக இருந்துவிட்டால்?

வெங்காயம் தெரிந்துகொண்டிருந்த மரியமுத்துவின் செயலை துண்டித்தது மோனிக்கத்தின் கரகரத்தகுரல்.

"என்ன மரியமுத்து வடலிவளத்துகள்ளுத் தாறன் எண்ட கதையாய் கிடக்கு இரண்டு கொத்து அரிசிவாங்கி வெள்ளியோடை வெள்ளி எட்டு நாளாச்சு நாங்கள் என்ன மண்ணையே தின்னுறது,

அட... பசியும், துன்பமும் மரியமுத்துவின் வீட்டில் மட்டுமல்ல மோனிக்கத்தின் வீட்டிலும்தான்.

"என்ன தங்கச்சி செய்யிறது, எடுத்த கூப்பனும் முடிந்துபோயிற்று. கூப்பன்மா வாங்கவும் கையில் வெள்ளைச்சல்லி இல்லை..."

மோனிக்கமும் பெண்தானே, பேசாமல் போகிறாள்.

இருமிக்கேட்ட திசையில் பார்வையைச் செலுத்தினார், அந்தோனிப்பிள்ளை அண்ணன். சின்னத்துரையர் முழித்தபடி அந்தோனிப்பிள்ளை அண்ணரைப் பார்க்கிறார். சின்னத்துரையரின் உதடுகள் நெளிகிறது. அவரின் உதடுகள் எத்தனையோவிதமான சிரிப்புகளைச் சிரிக்கக்கூடியது. அவரின் உதடுகளில் இப்போது நெளிவது ஏளனச் சிரிப்பு.

"அந்தோனிப்பிள்ளை... இப்படி... எத்தனை பேர் வெளிக்கிட்டிருக்கிறியள்..."

"ஏனண்ணை......வந்தனிங்கள்... படலையிக்கை நிக்கிறியள் இப்பிடி உள்ளை வாருங்கோவன்..."

"வாறது... கிடக்கட்டும்... நீ ...ஒரு கிழமையிலை தாறன் எண்டு ஐம்பது ரூபாவாங்கி... எத்தினைமாதம்... இல்லை, கேக்கிறன்."

"ஏனண்ணை... கையிலை மடியிலை வைச்சுக்கொண்டு... இல்லை எண்டு சொல்லுறனே ...இஞ்சை......நான் படுகிற பாட்டைத் தானே... பாக்கிறியள்"

சின்னத்துரையரை ஒருமாதிரி சமாளித்து அனுப்பிவிட்டார் அந்தோனிப்பிள்ளை அண்ணர்.

புழுங்கி அவியும் உடலை மறந்து இருக்கலாம்; ஆனால் கொதித்துப்பறக்கும் உள்ளத்தை அடக்க முடியுமா? அந்தோனிப்பிள்ளை அண்ணரின் இதயத்தில் கடற்கரை மண்ணை வைத்து, கட்டைவிரலால் அழுத்தித் தேய்ப்பது போன்ற உணர்வு, வேதனை, தவிப்பு!

ஏன்?... மரியமுத்துவுக்கும் அதே நிலைதான். ஆலையில் இட்ட கரும்புபோல் அவள் உள்ளம் துடிக்கிறது. அந்தோனிப்பிள்ளை அண்ணனின் குடும்பத்தை நிர்கதியாய் விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிறது விதி. விதி என்பது மனிதன் சொல்லும் சட்டமா? இறைவன் வகுத்த திட்டமா? இறைவன் வகுத்த திட்டத்திற்குத்தான் விதிஎன்ற திரை.

அவனின்றி அணுவும் அசையாது என்பது மரியமுத்துவும் அந்தோனிப்பிள்ளை அண்ணனும் அறியாத ஒன்றல்ல. ஆனாலும், மனம் ஒரு குரங்கு அல்லவா? அந்தக் குரங்கு அந்தோனிப்பிள்ளைஎன்ற மரத்தில் இருந்து அவர் குடும்பம் என்ற கிளையை உலுப்புவது ஏன்?...

(வளரும்)

## சுகாதாரவாரம்

குரு/கல்கமுவ R. C. T. M. பாடசாலையில் கடந்த 11-6-70 வியாழக்கிழமை மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. சிங்கலாகு அவர்கள் தலைமையில் சுகாதாரவாரக் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலை மாணவரின் சுகாதாரம் சம்பந்தமான பேச்சு, பாட்டு, நாடகங்கள் முதலியவை இடம்பெற்றன. பெற்றோரும் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர். இக் கொண்டாட்டத்திற்கு இப்பகுதிச் சுகாதார பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

---

**அர்ச். அந்தோனியார் அம்மானை**

பிரதியின் விலை: ரூபா 1 சதம் 50.

(100-க்கு 20 வீதம் கழிவு)

கிடைக்கும் இடம்:

எஸ். எம். இன்னாசிமுத்து, சென் தோமாஸ் வீதி, மாதகல் P. O.

---

**நன்றித்துதி**

பாலகயேசுவின் அர்ச். சின்னத்திரேசம்மாளிடம் நான் கேட்ட வரங்கள் பூர்த்தியாகியதையிட்டு நன்றியறிந்த ஸ்தோத்திரமாக இதைப் பிரசுரிக்கிறேன்.

ஜே. எஸ். பி.

## மரண அறிக்கை

யாழ். வண்ணையம்பதியில், வேளாண்மரபில், ஆறுமுகநாவலர் வழித்தோன்றலில் முற்றிப் பழுத்த சைவக் குடும்பத்தில் உதித்தவரும், கந்தர்மடமுதன் முதற் கத்தோலிக்கர் என்னும் பெருமைக்குரியவருமான திரு. அருளம்பலம் மிக்கேற்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டு கடந்த சிலமாதங்களாகப் பாயும் படுக்கையுமாயிருந்து அந்திய தேவதிரவிய அநுமானங்களை நல்லறிவுடன்பெற்று, பரகதிக்குத் தம்மைஆயத்தம்செய்து வந்து குருசோவீதியில் அமைந்துள்ள தமது இல்லத்தில் சென்ற 13-6-70 சனிக்கிழமை அதிகாலைவேளை தமது புத்திர, புத்திரிகள் சமுகத்தில் அமலன் திருக்கரங்களில் தமது ஆன்மாவை ஒப்படைத்து அமைதியாக மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 90.

இவரது பிரிவுத் துயரசெய்தி கேட்டுயாழ். ஆண்டகை மேற்றிராணியார், பல குருமார், பெரியோர், மற்றும் அனுதாபிகள் பலரும் இவரது சடலத்தைத் தரிசித்து இறுதி அஞ்சலி செய்து திரும்பினர்.

யாழ்ப்பாணத்திலே எவராலும் நன்கறியப்பெற்ற இவர் ஓர் உத்தம கத்தோலிக்க வேதாபிமானியாய் விளங்கி வந்தார். இவரது உயிர்த்துடிப்புள்ள ஆழ்ந்த வேதவிசுவாசம் இறுதிவரையும் ஒளிவிட்டு மிளிர்ந்தது. தினமும் காலையில் திவ்விய பூசைகண்டு, திருவிருந்தருந்துவார். தவறாது மாலைநேரம் கோவில்சென்று திவ்யநற்கருணை நாதரைச் சந்தித்துச் செபமாலை ஓதிவருவார். பல்வேறு ஒறுத்தல் முயற்சிகளைத் தமது நாளாந்த வாழ்வில் அனுசரித்து தேவதாயின் ஓர் உத்தம பக்தனாக ஒழுகிவந்தார். புனிதபிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை, நன்மரணச்சபை, சென் வின்சென்ற் டீ போல் தருமசபை, சஞ்சுவசையப்பர் சபை போன்ற பல பக்திச் சபைகளில் அங்கத்தவம் வகித்து எல்லோருக்கும் முன்மாதிரிகைகாண்பித்து, யாவரதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். இவரது வாழ்க்கையில் பெரும் பகுதியை — அதாவது 65வருடகாலத்தையாழ். ஆசனக்கோவில் உபதேசியாராகப் பணிபுரிவதில் கழித்து வந்தார்.

மறுநாள் அழகிய பேழையில் வைக்கப்பெற்ற இவரது பூதவுடலானது காலை 8-30மணியளவில் பெருந்திரளான இனசனர், அன்பர்கள், பக்திச்சபையினர், அனுதாபிகள் மத்தியில் ஊர்வலமாகத் தூக்கிச்செல்லப்பட்டு யாழ். ஆசனக்கோவிலை அடைந்ததும் அங்கு கட்டளைக்குரவர் அவர்களால் துக்கப் பாட்டுப்பூசை அருளப்பட்டு, அதன்மேல் அந்திம சடங்குகள் நிறைவேற்றியதும் பின்னர் அங்கிருந்து சேமக்காலை வரை பூதவுடலானது மோட்டோரதருடராகக் கொண்டு சென்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவரை இழந்து துயருறும் மக்கள், மருகர், பேரர், இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம். ஆன்மா சாந்தியடைவதாக.

---

"சீவியத்தில்என்னை நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்."

**திருமதி ஞானப்பிரகாசம் சூசன்**

அவர்களின்

**முதல் வருட நினைவு**

தோற்றம்: 1903

மறைவு: 21—6—1969

இதைக் காணும் சகல விசுவாசிகளும் திருமதி ஞானப்பிரகாசம் சூசனின் ஆத்தும இளைப்பாற்றிக்காக அன்னைமரி அமலன் யேசுவைப் பிரார்த்திக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இவளின் பிரிவால் துயருறும்: கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சாம்வீதி,

ஊர்காவற்றுறை.

---

நெடுந்தீவு மத்தி

**திருமதி அந்தோனி ரேசமுத்து**

அவர்களின்

**1-ம் வருட மரண ஞாபகம்**

மிகவும் மதுரயேசுவே, தேவரீர் சிலுவையில் தொங்கும் பொழுது அநுபவித்த அளவில்லாத கஸ்திநோவுகளைப்பார்த்து நித்திய இளைப்பாற்றியை இவளுக்கு அளித்தருளும் சுவாமி, முடிவில்லாத ஒளி இவளுக்குப் பிரகாசிக்கக்கடவது.

எனது அன்புமிக்க பத்தினியும், எங்கள் அருமைத் தாயாரும் எம்மை ஆறாத்துயரில்விட்டு அமலன் பதஞ்சேர்ந்த நிறைவு தினம் 26-6-70இல் பூர்த்தியாகின்றமையால் இத்தினம் நெடுந்தீவு, புனித யுவானியார் ஆலயத்தில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், இனசனர் நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றனைவரும் தங்கள் செபங்களில் இவளை நினைவு கூரும்படி பணிவாக வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும் அன்புக் கணவர்: சு. அந்தோனியும், மக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகை மனந்திரும்பிய வரலாறு

**செல்வி ஜோயிஸ் காப்பென்ரர் என்ற ஆங்கில நடிகை ஏழு ஆண்டுகளாகப் பெற்றி புறுக் இடமாக நடித்துப் பிரஸ்தாபம் பெற்றவள். இவள் வழமையில் இல்லாத ஒரு புதுவழியாகக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்த வரலாற்றைப்பற்றி எழுதியிருப்பது வருமாறு:**

தேவகிருபையால் வேதவிசுவாச வெளிச்சத்தைக் கண்டடைந்து கத்தோலிக்க திருமறையைத் தழுவிக்கொண்ட பலரின தும்வரலாறுகளை நீவிர் கேள்விப்பட்டிருப்பீர். பத்திரிகைகளில் படித்திருப்பீர். சிலர் புதுமைகளைக் கண்டும், வேறுசிலர் சமய ஆராய்ச்சியைக் கொண்டும், இன்னும்சிலர் வேதாகமமுதலாம் வேதபுத்தகங்கள், பத்திரிகைகளை வாசித்தும், பின்னும்சிலர் சுற்றுடலிலுள்ள கத்தோலிக்க நன்மக்களின் முன் மா திரிகையால் தூண்டப்பட்டும், மற்றும்சிலர் நல்ல பிரசங்கங்களைக் கேட்டும் இன்னன்னபல காரணங்களாலும் நம் திருமறையின்பால் ஈர்த்துகொள்ளப் படுகின்றனர். ஆனால், முரிந்துபோன என் முதுகுதான் அதில் என்னை ஈர்த்து கொண்டதென நான் எழுதும்போது எவருமே பிரமிக்கலாம்.

முரிந்துபோன என் முதுகைப் பொருத்திச் 'சட்டங்கள் வைத்துக் கட்டப்பட்டன. அவைகள் என்முதுகை அழுத்திக் கொண்டிருக்க ஒருகடினமான மெத்தைமீது நான் மல்லாந்து படுத்திருந்தேன். அப்பொழுது எனக்குண்டான கொடிய வேதனையைத் தாங்கலாற்றாது துடியாய்த் துடித்தேன்; பதைபதைத்தேன். அவ்வேளை என் மனதிலெழுந்த சிந்தனைகளாலேஎன் தலை சுழன்றது. இந்த உலகமே எனக்கு முடியப்போகிறதோ என்று தானும் நினைந்து என்மனம் கலங்கிறது.

லண்டன் நகரிலே வெஸ்ற் என்ட்எனும் இடத்து ஒரு நாடக அரங்கில் நடிப்பதற்காக அப்போதுதான் அங்குபோய்ச் சேர்ந்தேன். ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! எதிர்பாராத விதமாக ஒருவிபத்து ஏற்பட்டு நான் முதுகுப்புறமாக விழ்ந்தேன். என்முதுகு முரிந்தது. அதனால் உண்டான வேதனை ஒருபுறமிருக்க, மாதக்கணக்கிலே என்தொழிலில் நான் ஈடுபடமுடியாதுபோல் எனக்குத் தோன்றியது. ஒருகால் மறுபடியும் என்தொழிலில் ஈடுபடுவேனே என்றுதானும் சந்தேகித்து அங்கலாய்த்தேன்.

25 படுக்கைகளைக் கொண்ட ஆஸ்பத்திரி வாட்ஒன்றில் தேவபக்தியுள்ள ஒரு கத்தோலிக்க பெண்மணியின் பக்கமாக நான் கிடத்தப்பட் டிருந்தேன். இந்த நல்லபெண்மணியின் வேதவிசுவாசமே என்னைவிசுவாசவெளிச்சத்தில் ஈர்த்துகொண்டது. எவ்வாறு? அவள் மறுதினம் ஆபத்துக்கிடமான பயங்கர சத்திரசிகிச்சை செய்யப்படவிருந்தாள். அதனால் அவள் மனம் தளர்ந்து, பலங்குன்றியவள்போல் பயந்து நடுங்கினாள். அப்பொழுது அங்குவந்தார் ஒரு கத்தோலிக்க குருவானவர். அவளுடன்சிறிதுவேளை அமைதியாகப் பேசினார். பின்பு அவளிடம் அன்பாதரவாகப் பாவசங்கீர்த்தனம் கேட்டார். அவளுக்குத் திவ்வியநன்மையும் வழங்கினார். அவளை ஆசிர்வதித்துவிட்டு அப்புறம் சென்றார்.

அவர்வந்து சந்தித்ததுமுதல் அவளிடம் ஒருபெரும் மாறுதல் ஏற்பட்டது. அவள் வதனத்தில் காணப்பட்ட அச்சபயம் திடீரென அகன்றது. அவள் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்து மலர்ந்தது. சிறிது வேளையின்பின் அப்பெண்மணி என்னைவிழித்து: "இப்பொழுது என்மனம் சாந்திஅடைந்திருக்கிறது; எனக்கு நாளைய தினம் என்ன நேர்ந்தாலும் நேரட்டும்; இனிமேல் அது எனக்கு ஒரு பொருட்டல்ல; நான் உயிர்பிழைப்பதோ அன்றேல் அதனை இழப்பதோ எல்லாம் இறைவனின் சித்தம்" என்று முகமலர்ச்சியுடன் கூறினாள்.

— ஞானம் —

இதைக்கேட்டதே என்உள்ளத்தில் ஒருவிதகலக்கம் உண்டானது. ஏனெனில், அதுவரை நான் எந்தச் சமயத்தையுமே அலட்சியம் செய்துவந்தேன்; ஆனால், அந்த மாது கூறிய பொன்மொழிகள் கூரிய அம்புகள்போல் என்மனதில் அழுத்தமாகப் பதிந்து, என் சிந்தனையைக் கிளறிவிட்டன. படுக்கையில் கிடந்தபடியே சில தினங்களாக அவைகளைப் பற்றிச் சிந்தித்தேன். சிந்தித்துக் கொண்டே போனேன். கடைசியாக என்மனதிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதாவது கத்தோலிக்க மறையில் சேர்ந்துகொள்வதென்று ஒரு முடிவுக்கு வந்தேன்.

முரிந்த என்முதுகு பொருந்திவிட்டது. நானும் குணமடைந்தேன். நாடகஅரங்கில் மீண்டும் காட்சியளிக்கத் தொடங்கினேன். அப்பொழுது அண்மையிலிருந்தஒருகத்தோலிக்க கோவிலுக்குச் சென்றேன். அங்கிருந்த குருவானவரைச் சந்தித்து, என்மனதில் உள்ளதையெல்லாம் உள்ளவாறு அவருக்கு எடுத்துரைத்தேன். அவரும் முகமலர்ந்து என்னை வரவேற்றார். அன்றுமுதலே அவர் எனக்கு ஞானோபதேசம் படிப்பிக்க ஆரம்பித்தார். இரண்டு வாரங்களாக எல்லாம் நன்றாய்ப் போய்க் கொண்டிருந்தது. அதற்கிடையில் அந்நகரிலே எமது சங்கீத-நடனக் கச்சேரி முடிவடைந்தது. அடுத்த நகருக்கு இடம்பெயர வேண்டியிருந்தது. அதனால் எனது ஞானோபதேசப்பாடங்களைத் தொடர்ந்துபடிப்பது எங்ஙனமென்ற கேள்வி எழுந்தது.

அதே சுவாமியாரே அதற்கும் தகுந்தஓர் பதில்தந்தார். "இங்குபோல நீ எங்குபோனாலும் ஏன் ஞானோபதேசம் படிக்கமுடியாது? நீஒவ்வொரு நகரையும் போய்ச் சேரும்போது, அங்கங்குள்ள குருமனைக் கதவைத்தட்டி, ஒரு குருவானவர் எனக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுக்க முடியுமா? என்று கேட்கவேண்டும். அங்கே அவரிடம் படித்ததும், படித்து முடிந்தபகுதியைத் தெரிவித்து அவர் உமது ஞானோபதேசப் புத்தகத்தில் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொள்ளவேண்டும். அதனால் அடுத்த நகர்போய்ச் சேர்ந்ததும் எந்தமட்டில் நீ படித்திருக்கிறாய் என்பதை அங்குள்ள குருவானவர் தெரிந்துகொண்டு தொடர்ந்து உனக்குப் படிப்பிக்கமுடியும்" என்று ஆலோசனை கூறினார்.

இந்த ஆலோசனை நல்ல பலன் அளித்தது; அதனால் நான் ஞானோபதேச பாடத்தைத் தொடர்ந்துபடிக்க முடிந்தது. நானும் போனபோன நகர்களிலெல்லாம் பல்வேறு சபைகளையும்சேர்ந்த குருமாரிடம் ஞானோபதேசம்படித்து அவர்களின் புத்திபோதனைகளை மனதில்பதித்து, நல்ல வேதஅறிவைப் பெற்றேன். ஞான காரியங்களிலும் நல்ல தேர்ச்சியைப் பெற்றுக்கொண்டேன். அத்துடன் கத்தோலிக்க பிரித்தானிய இராச்சியத்திலுள்ள அநேக கோவில்களையும் பார்த்துப் பார்த்துப் பரவசமடையலானேன். ஆனால் இன்னும் ஒரு குறைபாடு இருந்தது. கத்தோலிக்கரான இனசனரோ, சிநேகிதிகளோ எனக்கு இல்லை; அதனால் எனது ஞானஸ்நானத்தின் போது எனக்கு ஞானத்தாயாய் இருக்குமாறு எனக்கு எவருமே கிடைக்கவில்லை. ஆனால், இதிலும் நான் வெற்றி கண்டேன்.

தினமும் மற்றினிக்கும், மாலைக் காட்சிக்குமிடையிலே நான் அங்குள்ள புனித ஞானப்பிரகாசியார் கோவிலைச் சந்தித்து வருகையில், ஒரு நாள் அதிலுள்ள ஒருபலிபீடத்தின் முன்பாக ஒரு சீமாட்டி கத்தரிக்காய்களைச் சுத்தஞ் செய்துகொண்டிருந்தாள். அவளோடு சம்பாஷிக்கத் தொடங்கினேன். அவர் எனதுசெய்திகளை அறியவந்ததும், முகம் மலர்ந்து சந்தோஷமடைந்து எனக்கு ஒரு தேநீர் விருந்தும் அளித்தார். நாம் இருவரும் சிநேகிதமானோம். அவள்எனக்கு ஞானத்தாயாய் இருக்கச் சம்மதித்தாள். நானும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். அவள் இன்று எனக்கு ஒரு ஞானத்தாய் மட்டுமன்றி, ஒரு நல்ல தாயாகவுமிருந்து, சுடர்விளக்குக்கு ஒரு தூண்டு கோல்போன்று விளங்குகின்றார். இதுவே நான் மனந்திரும்பிய வரலாறு என்க.

● சுதந்திர தென் அயர்லாந்தின் குடிசனத் தொகை 30 லட்சம் பேர்தானுமில்லை. ஆயினும், அந்நாடு வெளிநாடுகளிலே 7,000 மிஷனரிமாரைக் கொண்டிருக்கிறது. சராசரி விதமாகப் பார்க்குமிடத்து மற்றெந்த ஐரோப்பிய நாட்டிலும் இது அதிகம் கூடிய தொகையாகும்.

## செய்நன்றி மறவாத சீமாட்டி

ஐக்கிய அமெரிக்கதேச போஸ்ரன் நகரில் ஜவிபரூஸ் என்ற ஒரு கத்தோலிக்க சீமாட்டி வசிக்கின்றாள். சில வருடங்களின் முன் இவள் ஒருநாள் ஆபத்தான நோய் கண்டு அங்குள்ள புனித சூசையப்பர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அங்கே வைத்தியநிபுணர்கள் அவளைப்பரிசோதனைசெய்து அவள் உயிர் பிழைக்கிறதானால் உடனடியாக அவள் உடலிலே அவசியம் இரத்தம் ஏற்ற வேண்டுமெனக் கூறினார்கள். ஆனால், அவளுக்கு இரத்தம் உதவ எவர் முன்வரப் போகிறார்களென்று அவள் இனசனர் ஏங்கி நிற்கையில், எதிர்பாராத விதமாய் இன்னாரென அறியவராத இரத்தோபகாரி ஒருவர் அங்கு வந்து அவளுக்கு ஒரு பைந்து இரத்ததானம் செய்து போயினர். உடனே அவள் உடலில் இரத்தம் ஏற்றப்பட்டுச் சில தினங்களில் அவளும் குணமடைந்து ஆஸ்பத்திரியைவிட்டுச்சென்றாள் ஆனால், செல்லும் போது தனக்கு இரத்த தானஞ்செய்த அந்தப் பேருபகாரி யாரென அறிந்து அவருக்கு ஒரு சன்மானம் அளிக்க விரும்பி ஆங்கு பலரையும் விசாரணை செய்தும் அவரைக் கண்டறிய அவளால் முடியவில்லை. ஆயினும், அவர் செய்த நன்றிக்கு என்ன பதில் நன்றி செய்வதெனப் பலநாள் சிந்தித்துக் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள். அதாவது, வருடந்தோறும் ஒருமுறை அந்த ஆஸ்பத்திரியின் இரத்தவங்கிக்குச் சென்று ஆபத்தான நோய் கண்டு இரத்தம் தேவைப்படும் நோயாளி ஒருவர் உயிர் பிழைக்கத் தனது இரத்தத்தில் ஒரு பைந்து தானஞ் செய்ய வேண்டும் என்பதே. இந்தத் தியாகத்தை இன்றுவரை அவள் செய்துவருகின்றாள். இது விஷயமாய் எவரேனும் அவளைக் கேட்டால், "முன்பின் நான் அறியவராத ஒருவர் முன்வந்து அன்றொருநாள் எனக்கு இரத்த தானஞ் செய்தார். அதற்காக நானும் இந்தத் தியாகத்தைச்செய்து எனது நன்றியறிதலைக் காண்பிக்கிறேன்" என்று சொல்லுகின்றாள்.

உலக முன்னேற்றத்துக்கு

## சிறந்த ஒரு வழி

மெக்சிக்கோ தேசத்திலே இப்போது உலக உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்று வருகின்றது. இப்போட்டியில் உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள விளையாட்டுப் பிரியர்களின் கவனம் செலுத்தப்படுகின்றது. இப் போட்டி தொடங்குமுன் பரிசுத்த தந்தை இதில்பங்குபெறும் யாவரையும் ஆசிர்வதித்து அனுப்பிய செய்தியில், "சமாதான மனப்பான்மையுடன் அப் போட்டிகள் நடந்தேற வேண்டுமென்றும் அவ்வாறு நடைபெறுமாயின் அது உலக முன்னேற்றத்துக்கு மிகத்திறமான ஒருவழிவகையாகுமெனவும் கூறினார்.

புத்தக மதிப்புரை

## சுவாமி பியோ

எழுதியவர்:
சுவாமி எஸ். கபிரியேல்
பதிப்பகம்:
புனித சவேரியார் அச்சகம்,
தூத்துக்குடி.
கிடைக்குமிடம்:
திரு. மைக்கின் ஜி. ரெட்றிக்ஸ்,
புனித மிக்கேல் நூல்நிலயம்,
6, ஜம்பட்டா தெரு,
கொழும்பு—13,
இலங்கை.
விலை: பிரதி சதம் 75.

வண. பியோ சுவாமிகள் என்றால், கத்தோலிக்க உலகம் அவரை நன்கறியும். கத்தோலிக்க தமிழுலகும் அவர் பெயரைக் கேட்டதே தலை வணங்கா நிற்கும். அத்துணைபெரிதாக அவரின் பேரும் புகழும் பிரஸ்தாபம் பெற்றிருக்கின்றன. ஆம், அவர் ஒரு புனித குரு. ஐந்து திருக்காய வரம் பெற்ற குரு. புனித வியான்னி அருளப்பரைப் போன்று பாவிகளின் ஆன்மநிலையை ஊடுருவி அறிந்துகொள்ள வரம் பெற்ற ஓர் உத்தம ஆத்துமகுரு. இவைபோலும் சிலவிபரங்களைத் தவிர அவரைப் பற்றிய பிற விசேடங்களை அறிந்திருப்பவர் நம் தமிழ்மக்களில் மிகச்சிலரே. காரணம், இத்தாலியம், ஆங்கிலம், பிரான்சிய முதலாம் ஐரோப்பிய மொழிகளில் அவரின் வாழ்க்கை வரலாறு சிறப்பாக வெளிவந்துள்ளபோதிலும் அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியிலோ இதுவரை எதுவுமே வெளிவந்திலது. இந்தக் குறையை நிவிர்த்திசெய்யுமுகமாகவே இச் சிறு நூல் வெளி வந்திருக்கிறது. ஆயினும், இஃது ஒரு பெருநூலாக வெளிவந்திருந்தாலோ என்பதுதான் எமது மனக்குறையாகும்.

சுவாமிகளின் பெற்றோர் பரம ஏழைகள். ஆனால், இறைப்பற்று மிக்கவர்கள். சிப்பியுள் மதிக்கரிய முத்துப்போலும், எளிமையின் மடியில் ஒளிவீசும் சுடர் மணிபோலும் அவர்களது குடும்பத்தில் உதித்த சுவாமிகளின் இளமைப்பருவம், துறவற சீவியம், ஐந்து திருக்காய வரம் பெற்றஅதிசயம், திவ்வியபூசைப் பலி ஒப்புக்கொடுக்கும்போதெல்லாம் அவரின் உண்டான பக்திப் பரவசம், தங்கள் பாவச் சுமையை அவர் பாதங்களில் இறக்கி ஆன்மசாந்தி அடையுமாறு தினமும் அவரைச் சரணடைந்த பாவிகள் பெற்ற ஞானச் சலாக்கியம், பாவப்பிணியோடு சரீரப் பிணியும் போக்கிப் பலருக்கும் அளித்துவந்த அற்புத சௌக்கியம், ஏககாலத்தில் இரு இடங்களில் காட்சியளித்தும், வாழ்க்கையின் எதிர்காலத்தைப்பற்றி எடுத்துக்கூறியும் எவரையுமே பிரமிக்கச் செய்தவிதம், அவரின் அந்திய வேளை பற்றிய சம்பவம் ஆதியவற்றையெல்லாம் இச்சிறு நூல் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துக்காட்டியிருப்பது பாராட்டத்தக்கது.

நிகழும் நூற்றாண்டின் ஐந்துகாயப் பிரான்சீஸ் — திருமுழுக்கின்போது அவருக்குச் சூட்டப்பட்ட பெயரும் பிரான்சிஸே — என அறியப்படத்தக்க பியோ சுவாமிகளின் வாழ்க்கைவரலாற்றை அறிய விரும்பும் மக்கள் இந்நூலைப் படித்து, இதனைத் தங்களுக்குக் கிடைத்த அரியதொரு பொக்ஷமென்றே கருதுவார்கள் எனலாம். பியோ என்றால் பயஸ்; எம் தமிழ் மொழியில் பத்திநாதர். ஆம், பெரும் கடவுள் பக்தரான இப்பரிசுத்த குருவரின் சலுகையைப் பக்தர்கள் பலரும் பெற்று, ஏற்கனவே அவருக்கு நன்றிக்கீதம் படிக்கத் தொடங்கியுள்ளனர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. நமக்கு அனுப்பியபிரதிகளுக்காக நன்றி பாராட்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!

ஒருசமயம் மகாத்மா காந்தியடிகள் தென் ஆபிரிக்காவுக்குச் சென்றுகொண்டிருந்தார். வழியிலே கொஞ்சத் தூரம் அவர் ரயில்வண்டியிலே பிரயாணம்செய்ய நேர்ந்தது. இரண்டாம் வகுப்பிலே அவர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அதே இரண்டாவதுவகுப்புப் பெட்டியிலே வேருெரு ஆங்கிலேயர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். ஓர் இந்தியன் தனக்குச் சமமாக உட்கார்ந்துகொண்டு பிரயாணம் செய்வதாஎன்று ஆத்திரமடைந்த ஆங்கிலேயன் மகாத்மாவின் கன்னத்திலே ஓங்கி அறைந்தானும். மகாத்மா அதுகண்டு பதறினுரா? இல்லை; கோபம்கொண்டாரா? இல்லவே இல்லை. மாருக என்னசெய்தார் தெரியுமா? தன்னை அறைந்த ஆங்லேயனின் கரம் வலிக்குமேஎன்று வருந்திஞராம் உத்தமர் காந்தியார், அந்த உத்தமரின் அடக்கத்தை என்ன என்பது! அதஞல்தான் அவரை உலகமே புகழுகிறது. அவர் இறந்துபோயும்கூட அவருடைய திருநாமம் இன்றும் அழியாமல் வாழ்கிறது.

ஆகவே, அடக்கத்தைக் கடைப்பிடியுங்கள், பெற்ருேருக்கும், பெரியோருக்கும் அடங்கி வாழுங்கள்.

— அண்ணு

# ஏமாற்றம் — இ. பேர்ணுட்

உயர்ந்தமரம். அதன் பிரிந்து வளைந்த கொம்பரு ஒன்றில் மிருந்த சிரமப்பட்டுச் சிறு தடிகளையும் தும்புகளையும் அங்குமிங்குமாகச் சேர்த்துவந்த இரு காக்கைகள், தம் பசியையும் களைப்பையும் அவை பொருட்படுத்தவில்லை. அவைகளின் முழுக் கவனமும் அந்த மரத்தில் அமைக்கவிருக்கும் கூடுபற்றியதுதான்.

அந்த மரத்தில்......

அழகான பஞ்சு மெத்தைபோன்ற ஒரு கூட்டையே அமைத்து ஆனந்தம்கொண்டன காக்கைகள். அவற்றின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இல்லாளான அந்தப் பெண் காகம் நாளுக்கொன்ருக நான்குமுட்டைகளை யிட்டது.

அருகிலிருந்தமரத்தில்......

அதிக நாட்களாக இவற்றின் செய்கைகளை மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தது ஒரு குயில். காகங்கள் அங்கிருக்கவில்லை. இத்தருணத்தைத்தான் அது எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. கூடே கட்டியறியாத அந்தக் குயில் பஞ்சுமெத்தை போன்ற அந்தக்கூட்டில் அமர்ந்தது. அங்கிருந்த காகத்தின் முட்டை ஒன்றைத் தூக்கி வெளியே வீசியது. தனது முட்டை ஒன்றை அக்கூட்டில் இட்டுச் சென்றது. அடுத்தநாளும் காகத்தின் இன்னெரு முட்டையை வெளியே வீசிவிட்டு மேலும் ஒரு முட்டையை இட்டுச் சென்றது.

நான்கு முட்டைகளும் கூட்டில் அப்படியேயிருந்தன. அடுத்தநாட் தொடக்கம் காகம் அந்த முட்டைகளை அடைகாத்துவந்தது. ஆண் காகம் வெளியே சென்று அதற்கு உணவுதேடிவந்து கொடுத்தது. நாட்கள் சென்றன. அமைதிகுடிகொண்டிருந்த அந்த மரம் அல்லோலகல்லோலப் பட்டது. அதற்குக் காரணம் அங்கு புதிதாகப் பிறந்த குஞ்சுகள்தான். காகங்கள் இரண்டும் ஊண் உறக்கமின்றி மாறி மாறி உணவுதேடிவந்து, வேளைக்குவேளை ஊட்டின. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா? இனிய பல கனிகள் இன்பமாய் ஊட்டின. நாளொருவண்ணமாய் வளர்ந்த குஞ்சுகளுக்கு இறகுகளும் அரும்பத் தொடங்கின.

காலச்சக்கரம் சுழன்றுகொண்டிருந்தது. தம்மழலைகளின் மழலை மொழிகேட்கக் காகங்கள் துடியாய்த் துடித்தன. ஆம் கா! கா என்ற கானம் கூ! கூ! என்ற குயிலோசையுடன் கலந்துவந்தது. உற்றுக் கேட்டன. மீண்டும் அதே கானம்தான் கலந்தொலித்தது. குஞ்சுகளும் பறக்கும் பருவத்தை அடைந்துவிட்டன.

என்ன ஏமாற்றம், குஞ்சு பொரிக்கத்தெரியாத அந்த வஞ்சகக் குயில் இம்முறையும் எம்மைம ஏமாற்றிவிட்டது. இம்முறையும் ஏமாற்றப்பட்டுவிட்டோம். அடுத்தமுறை வாட்டும் என்று சிந்தித்து இனிச்செய்யவேண்டியவற்றை ஆலோசித்தன.

அடுத்த மரத்திலிருந்த குயிலொன்று கூ! கூ! என்று இலைகளைக் கேலிசெய்யும் பாவனையில் பாடிக்கொண்டிருந்தது. ஆத்திரம் மேலிட இரண்டு காக்கைகளும் கூட்டிலிருந்த குயிலின் குஞ்சுகளைக் கொத்தித் துரத்தத் தொடங்கின. கொத்திக் கொத்தித் துரத்தின குயிலின் குஞ்சுகளும் முடியுமானவரை அவைகளுக்குத் தப்பிச் சென்றன. காக்கைகள் தமது குஞ்சுகளின் நினைவுவரவே வேகமாகத் திரும்பி வந்துகொண்டிருந்தன.

அவைகளுக்கு ஏதோ புத்தி புகட்டுவதுபோல அண்டை வீட்டுக்காரனின் வானெலி "ஏமாற்ருதே ஏமாற்ருதே" என்ற இசையை ஒலிபரப்பிக்கொண்டிருந்தது.

# "இறைவனுக்குப் பயப்படும் பயமே ஞானத்தின் ஆரம்பம்"

(ஞானுகமம் 1-ம் அதி. 7-ம் வச.)

ஞானம் என்பது, மனிதருக்குப் பரலோகத்திலிருந்து இறைவனுல் கொடுக்கப்படும் ஒரு மேலான கொடை. இதனைப் பரி. யாகப்பர் 3-ம் அதி. 17-ம் வசனத்தில், "மேலாவிலிருந்து வரும் ஞானமே சிறந்தது" என்கிருர். பரி. சின்னப்பரோ, சலோமோன் அரசரின்ஞானத்தைப் புதுப்பித்து, சருவேசுரனைப் பற்றிய சினேகப் பயித்தியமே மெய்யான ஞானம் என்கிருர். நம்அன்பின் மீட்பரோ, "சருவேசுரனுடைய இராச்சியத்தையும், அவருடைய நீதியையும் முந்த முந்தத் தேடுங்கள்" அதுவே நித்தியத்தைத் தரும் ஞானம் என்கிருர்.

இந்த மேலான உன்னத வரத்தைப் பெறுவதற்கு, சலோமோன் அரசன் தன் புத்திரனுக்குக் கூறிய புத்திமதியை ஆழ்ந்து சிந்திப்பது பயன்தரக்கூடியதாகும். அவர் தேவபயத்துடன் சீவித்து, இறைவனுக் குகந்தவராய் வாழ்ந்ததினுல், இறைவன் அவருக்கு ஞானத்தின் வரத்தைக் கொடுத்தார். முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப் பெற்ற இவ்வரத்தைப் பெற்ற அரசன், "கர்த்தருக்குப் பயப்படும் பயமே ஞானத்தின் ஆரம்பம்" என்று கூறி, தொடர்ந்து, (ஞானுக. 3-ம் அதி. 5-ம் வசனம் தொடக்கம் சில வாக்கியங்கள்), "உன்பூரண இருதயத்தோடு இறைவனில் நம்பிக்கையாய் இரு. உன் சுய புத்தியை நம்பாதே: உன் வழிகள் எல்லாவற்றிலும் அவரை அறிந்துகொள். அப்பொழுது அவர் உன் பாதையைச் செம்மைப் படுத்துவார். நீ உன்னை ஞானியென்று மதியாதே: இறைவனுக்குப் பயந்து தீமையை விட்டு விலகு. உன் பொருளினுலும், உன் விளைவெல்லாவற்றிலுமுள்ள, முதற் பலனினுலும், இறைவனைக் கனம்பண்ணு: அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணப்படும். உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும் என்கிருர். இவ்வாறு புத்தி புகட்டிய அரசர். இறைவனது தண்டனையையும் சந்தோஷமாய் ஏற்க வேண்டும் என்கிருர். என் மகனே! "இறைவன் தரும் தண்டனையை அற்பமாய் எண்ணுதே. அவர் கடிந்துகொள்ளும்போது, தளர்ந்து போகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைத் தண்டிக்கிறது போல, இறைவன் தான் நேசிக்கிறவனையும் தண்டிக்கிருர்; ஞானத்தைக் கண்டடைந்த மனிதனும், புத்தி பெற்ற மனிதரும் வாழ்வுடையவர்கள். அது முத்துக்களைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றது. அதன் பாதைகள் சமாதானமானவை. அது தன்னை அடைந்தவர்களுக்கு, ஜீவ விருட்சம். மெய்ஞ்ஞானத்தையும், நல்ல ஆலோசனையையும் ஏற்றுக்கொள்; அவைகள் உன் கழுத்துக்கு அலங்காரமும், உன் மனதுக்கு ஜீவனும் ஆகும். உன் கால் இடருது: உன் நித்திரை இனிதாய் இருக்கும் என்கிருர்; சர்வ வல்லபரிடமிருந்து ஞானத்தைப் பெற்ற அரசனிடமிருந்து வெளிப்பட்ட இவ்வமிர்த வாக்குகள் நமக்கு வேண்டிய ஞான அறிவைத் தருகின்றன. வேதாகமத்தை நாம் முதலிலிருந்து கடைசிவரை புரட்டினுல் இறைவனுக்குப் பயந்து நடப்போர் படிப்படியாக, பாவத்துக்குப் பயந்து அதை விலக்கி, புனிதமடைந்து, சமாதான வாழ்வடைந்தததையும், தேவ பயமற்ருேர், மாருக, பாவ வழி நடந்து, தேவ தண்டனை பெற்றும், உணர்வற்றவர்களாகி, மூடக் கொள்கைகளில் ஏமாற்றம் அடைந்து, உலகியல் ஞானத்தைப் பின்பற்றி, ஏமாற்றம் அடைவதையும் காண்கிருேம். "மூடன் ஞானத்தையும், போதகத்தையும் அசட்டைபண்ணுகிருன்" என்று அரசரே கூறுகின்ருர்;

— நாதன் —

பரி. சின்னப்பர் இத் தேவ பயத்தைப்பற்றி, தமது சபையாருக்கு எழுதிய நிருபங்களில், "மிகப் பயபக்தியாக" என்று அடிக்கடி கூறி எச்சரிக்கிருர். பக்தியை அனுசரிக்கும்படி ஏவும்போது, பயத்துடன் சேர்ந்த பக்தி என்றே கூறுகிருர்: அதாவது பாவச் சார்புள்ள மனிதன், பாவத்தைப் புரிவதன்மட்டில், பயப்படுகிறவனுகவும், நீதியைத் தேடுகிறவனே, தைரியத்தின் பரி. ஆவியைக் கொண்டு, ஞானத்தைக் கண்டடைகிருன்" என்றும் விளக்குகிருர்: இன்று உலகம் புரட்சியடைவதற்கும், சமாதானமின்றி வாழ்வதற்கும், மூலகாரணம் தேவபயம் இன்மையே; தேவபயம் என்பது, பாவம் செய்யப் பயப்படுவது என்று சுருக்கமாகக் கூறலாம்: பாவத்தின் தண்டனை மரணம்: ஆகவே, பாவம் செய்பவன் தனது ஆத்தும மரணத்தைக் கூலியாகப் பெறும்போது, தலைவனுகிய இறைவனுக்கும் பயப்படுவது நீதியானதே. இவ்வாறு பயப்படுபவன் பக்தியுடையவனுக மாறி, புண்ணியம் செய்ய ஏவப்படுகிருன்: உள்ளங்களை இருட்டடிக்கும் பாவத்தை விலக்கும்போதுதான், பரிசுத்த ஆவியானவரின் ஒளியினுல் அருள்பெற்று, இறைவனின் சத்தியத்தை, வல்லமையை, மகத்துவத்தை, கருணையை அறிகிருன். அப்போது அவன் உள்ளத்தில் விசுவாசமுண்டாகி, நம்பிக்கையில் திடப்பட்டு, தேவ சினேகத்தால் கவரப்படுகிருன். இத் தேவசினேகம், நாளாந்தம் புண்ணியங்களால் அவ்வான்மாவை அலங்கரித்து, சினேகப் பயித்தியமாக்குகிறது: அதாவது எவ்வித உபத்திரவங்களையும், சிலுவைகளையும் தாங்கக்கூடிய வல்லமை அடைகிருன்; கிறிஸ்துவைப் பற்றிய சிலுவையே அவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குகிறது. அவரது சிநேகத்தைப்பற்றிய கஷ்டச் செயல்கள் அவனுக்கு வெற்றிக் கேடயமாகின்றது. இதனையே பரி. சின்னப்பர் (1-ம் கொரி. 1-ம் அதி. 18-ம் வச.) "சிலுவையைப் பற்றிய வாக்கியம் கெட்டுப்போகிறவர்களுக்கே பயித்தியமாய் இருக்கிறது. இரட்சணியம் அடைகிறவர்களாகிய நமக்கோ, அது தேவபலமாய் இருக்கிறது என்கிருர்" எவ்வளவு ஞானமுள்ள வார்த்தைகள். இவ்வமிர்த வாக்கு பரி. சின்னப்பரிடமிருந்த சினேகப் பயித்தியத்தின் அளவை விளக்கிக் காட்டுகிறதல்லவா? ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானமுள்ளவன். அவனது இதயத்தை இறைவன் அறிவார். இப்பிரபஞ்சத்தின் மக்களோ அவனைப் பயித்தியகாரனுக மதிப்பர். ஆயின், இறைவன் அவர்களுக்கு ஆயத்தப்படுத்திய இன்ப உலகை பரி. சின்னப்பர், பரி. அருளப்பர் மற்றும் புனிதர்களெழுதிய நூல்களே சாட்சி பகரவேண்டும்;

ஆகவே, நாம் ஞானம் என்னும் வரத்தின் மகிமையை வேதாகமத்திலிருந்தும், நிருபங்களிலிருந்தும், புனிதர்கள் வாழ்வின் சரிதைகளில் இருந்தும் கற்றுக்கொள்வோம். சிறுவயதிலிருந்தே நம் சிருருக்கு, தேவபயம் என்னும் சஞ்சீவியைப் பாலுடன் பருக்குவோம். நாகரீகம் என்று ஏமாற்றும் அநாகரீக உலகில் இருந்து நம் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமாகில், இத் தேவபயம் என்னும் மருந்து, பெற்ருேரின் புத்திமதியால் தேவ அமிர்தமாக மாறி, அவர்களை நித்தியத்தின் பாதையில் இட்டுச் செல்லவேண்டும். தற்காலச் சிருரில் எத்தனைபேர் மோட்சம் நரகம் என்பதன் பேதத்தை அறிந்திருக்கின்றனர்? இதன் உண்மையான வித்தியாசத்தை உணரும் பிள்ளை, விண்ணரசின் பாதையில் நேர்மையாக நடக்கும் கபடற்ற ஞானத்தைக் கண்டடைவான்.

## எங்கள் தமிழ்!

எங்கள் தமிழ்! இனிய தமிழ்
எம் மொழியிலு மிலா
இனிய முப்பிரிவுகளாம்
இயல் இசை நாடகமும்
ஏற்றமுடன் கொண்ட தமிழ்!
ஏதும் மாசில்லா மாண்புத் தமிழ்!

கன்னித்தமிழ்! எங்கள் தமிழ்!
கட்டப்பொம்மன் காத்த தமிழ்!
பண்டைத் தமிழன் இளங்கோவும்
பண்புமிக்க பாரதியும்
வண்கவியால் வளர்த்த தமிழ்!
வளம் பலவும் கொண்டதமிழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண. டோருச் சுவாமியாரும் மாட்டு வண்டிலும்

(காவலூர்க் கவிஞர், ஞா. ம. செல்வராசா)

வண. டோருச்சுவாமியார் அவர்கள் பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவர். 1888ஆம் ஆண்டு வியன்ன நகரில் குருப்பட்டம் பெற்று, 1889ஆம் ஆண்டு இலங்கைத்தீவிலே திருப்பாதமூன்றி, மட்டக்களப்பு, மாந்தை, மன்னர், வலிகாமம் மேற்கு, சில்லாலை, ஆனைக்கோட்டை, நாரந்தனை முதலாம் இடங்களில் பங்குக்குருவாய்த் திருத்தொண்டாற்றியவர். கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் அதிபராகப் பதவிவகித்து ஈற்றில் 1923ஆம் ஆண்டில் ஊர்காவற்றுறையிலும் கட்டளைக் குரவராகவுமிருந்து இளைப்பாறியவர்.

இவர் ஒரு சிறந்த பத்திமான். பழுத்த அனுபவசாலி. முதிர்ந்த கிழவன். தலைதுவக்கம், தாடிவரைக்கும் சுழியோடிப் பார்த்தாலும் ஒரு கறுத்த ரோமத்தைக் கண்டெடுத்தல் மிக மிகக் கடினம். அந்தக்காலத்து ஒருதுட்டுப் பனங்கட்டிக்குட்டானுக்கும், இந்தக்காலத்து அரைறுத்தல் பாணளவுக்கும் முன்பின்னிருக்கும் அவரதுஉயரம். பருமை அவ்வளவு மோசமில்லை. அசல் கடதாசிக்கூட்டத்து இராசாவென்றே சொல்லலாம். இவர் பாவித்தகதிரை இன்றைக்கும் ஊர்காவற்றுறை அந்தோனியார் கோயில் அறைவீட்டில் பழுதடைந்து கிடக்கிறது. அந்தக் கதிரையைப் பார்த்தால் இவரது உடற்கூற்று வண்ணம் நன்கு விளங்கும்.

மேற்கூறிய லட்சணம் பொருந்திய இந்த ஐரோப்பியப் பழசு, ஊர்காவற்றுறை ஐந்து கோயில்பற்றுக்கும் அதிபதியாயிருந்தவர், அதாவது கட்டளைக் குரு. நாலு கோயில்கள் அக்கம் பக்கத்திலிருந்தாலும், கரம்பொன் செபஸ்தியார் கோயில் உள்ளபடியே ஒன்றரை இரண்டு கட்டை தூரத்திலுள்ளது. இவ்வளவுக்கும் உதவிக் கட்டளைக்குருவுங் கிடையாது. நிரந்தரமாகச் சுவாமியாரின் அறைவீட்டில் கூப்பிட்ட குரலுக்கு இருப்பவர்கள், கோக்கி ஞானப்பிரகாசமும், தண்ணீர் வண்டிலிழுக்கும் மெலிஞ்சிமுனை அவுறாவும் மாத்திரம். உபதேசியாரும் கலியாணக் கூறல், நோவனை, நத்தால், பாஸ்காபண்டிகை வந்தால் வருவார். அல்லது தனக்கு மரக்கறி தேங்காயெண்ணை தட்டுப்பட்டாலும் அறைவீட்டுப்பக்கம் தலைகாட்டுவார். அவ்வளவுதான் அவரின் உத்தியோகம்.

இந்தச் சங்கடமான நிலையிலே, தள்ளாத வயதிலே, மையவாடிக்குப் பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்துப் பெரியதுரையின் ஒப்பத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும் இந்த நடைப்பிணம், ஐந்து கோயில்பற்றுள்ள பெரிய மீசாமை தன்னந்தனியே கொண்டிழுப்பதென்றால்முடியக்கூடிய காரியமா! இது தெய்வத்தின் வல்லமையே யல்லாது இவரது வல்லமையென்று யாரால் சொல்ல முடியும். நாளாந்தம் பத்து மணித்தியாலத்திற்கு மேல் திருத்தொண்டாற்றுகிறாரென்று கூறலாம். ஏனெனில், தினமும் கோயில் கட்டளைகாரர்கள் காலை எட்டு மணிக்கு வந்து தங்கள் தங்கள் கோயில் கணக்கு, நோவனைநிலுவைகள் பார்த்து முடியப் பத்து மணியாகும். பத்து மணிக்குப்பிற்பாடு பள்ளிக்கூடம் சென்று ஞானோபதேசப்பாடம் சொல்லிக்கொடுத்து வருவதற்குப் பதினொன்றாகும். பின்பு கடிதங்கள் எழுத வாசிக்க, ஞானஸ்நானம் கொடுக்க, அவஸ்தைக்குச் செல்ல, வருவாரோடு கதைக்கச் சுமார் பன்னிரண்டரைக்குமேலாகும். பின்பு மதிய போசனம், பத்திரிகை படித்தல் சொற்ப ஓய்வுக்குப்பின் இரண்டுமணிதுவக்கம் நாலுமணிவரைகூட்டக்காரரோடுசம்பாஷணை. இதற்குள்ளே வார்த்தைப்பாடு, சாவீடு, அவஸ்தை முதலியவைகளும் இடம்பெறும். நாலுமணி துவக்கம் ஆறுமணிவரை பாவசங்கீர்த்தனம். இந்த நெருக்கடிக்கிடையில், உபதேசியார் தாக்கல்பண்ணி எத்தனையோ நாள் தவணைபோட்ட மசுவாதக்காருடைய வழக்கு விசாரணை வேறு. இத்துடன் முடிந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். நடுச்சாமத்தில் பந்த வெளிச்சத்தோடு அவஸ்தைக்கு வந்து கதவுதட்டும் கும்பல் புறம்பு.

மேற்கூறிய ஞானக் கடமைகள் யாவும் எவ்வித சோம்பலும் சோர்வுமின்றித் தன்னந் தனிமையாகச் செய்துமுடிப்பார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன்திருநாட்களிலும் முதற்பூசை காலை ஏழுமணிக்கு, ஊர்காவற்றுறை அந்தோனியார் கோவிலிலும், இரண்டாம் பூசை கரம்பொன் செபஸ்தியார் கோயிலில் ஒன்பது மணிக்கும் வைத்திடுவார்.

முதலாம் பூசையில் எழுந்தேற்றம் முடிந்தபிற்பாடு நமது அடுத்த கதாநாயகனை முத்தையா அப்பா அவர்கள் இரட்டை மாட்டு வண்டிலோடு கோயில் வாசலில் வந்துநிற்பார். வெள்ளைக்கூடாரம், கூடாரத்தின் முகப்பில் சிவத்தநிறக் குஞ்சம், பெயர்ப்பலகை, பனையோலைப்பாய், சின்னத் தும்பு மெத்தை, தோலோடு சேர்ந்த துவரந்தடி ஒன்று, இவ்வளவும் வண்டிலின் சோடினைகள். மாடுகளைப்பற்றிச் சொல்லத்தேவையில்லை. கழுத்தில் இரட்டைப்பட்டுச் சங்கிலியோடு சலங்கைகள் கலகலக்கும். கொம்புகளினிடையில் குஞ்சம் பளபளக்கும். என்றாலும் அப்பாவின் மாடுகளுக்குக்குச் சில்லாலை உருக்குப்பாகு பத்தியத்தோடு சாப்பிடக் கொடுத்தாலும் இம்மியளவும் கொழுப்பேறாத சும்மாடுகள். கொழும்புத்துறை வ. மடத்துச் சக பாடிகளின் வளர்ப்பிணிகள் என்றும் சொல்லலாம். வண்டில்கார அப்பா ஓரளவு நமது குருவானவரைப்போல் அடுக்கத்தொடுக்க இருப்பார். என்றாலும் வண்டி குண்டியில் அப்பா ஒருபடி முன்னேற்றம். மோட்டார் கார் டயரிலுள்ள மக்கிலின் பப்பாவுடைய மூத்த அண்ணன்போன்றவர்.

பூசை எட்டு மணிபோல் முடிவடையும், சுவாமியார் பிச்சைக்காரருக்குத் தருமப் பணங் கொடுத்து வண்டியிலேற எட்டேகால் பிடிக்கும். அதன்பிற்பாடே வண்டி புறப்படும். முத்தையா அப்பா வண்டியைத் தட்டிவிட்டால் பார்க்கத் தேவையில்லை. [illegible] மாடுகள் பாயுமாப்போல் தெரியும். ஆனல் உண்மை அதுவல்ல. அப்பாவின் கையுங் காலும் துவரந்தடியும் பாயுமேயொழிய, மற்றப்படி மாடுகள் இரண்டும் புதுமணத் தம்பதிகளின் கோலத்தில் தான் நடைபயிலும். சுவாமியார் வண்டிக்குள்ளிருந்து தமது நாளாந்த செபத்தையும் சொல்லிமுடித்திடுவார். இதற்கிடையில் இரண்டாம் பூசைக்குச் செல்லும் ஊர்காவற்றுறைக் கிறீஸ்தவர்கள் ஆணும் பெண்ணும் சின்னதும் பெரியதுமாகக் கல்லையும் முள்ளையும் பாராது, களைப்பையும் இளைப்பையும் கோக்காது ஓடியோடி பனங்கூடலையும், வயலையும், வரம்பை

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# அழைப்பின் பெருமை

**தெய்வீக அலுவல்கள்:**

இந்தத் தெய்வீக அலுவலுக்கு ஏழை பணக்காரன் என்ற பாகுபாடில்லை. உயர் குலத்தில் உதித்தவன், தாழ் குலத்தில் உதித்தவன் என்ற வேறுபாடில்லை. பெரும் பதவிகள் வகித்துச் சில பட்டங்கள் பெற்றவரே தகுதியுடையவர் என்ற சட்டமில்லை. இறைவன் யாரையும் அழைக்கலாம். அழைக்கும் உரிமை அவருடையது. அவர் அழைத்தால் அதை மகிழ்வோடு பின்பற்ற வேண்டியது நமது கடமை. அன்றேல் மடைமை. "நீங்கள் என்னைத்தெரிந்துகொள்ளவில்லை நானே உங்களைத் தெரிந்துகொண்டேன்" (அரு. 15 ; 16). ஆரோனைப்போல்சருவேசுரனுல் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த மகிமைக்குத் தானுய் ஏற்படுகிறதில்லை (எபிரே. 5 : 4).

**தெய்வீக அலுவலுக்குரிய தகமைகள்!**

அனலெனப் பற்றியெரியும் அளப்பரிய இறை அன்புவேண்டும். "இவர்களிலும்நீ என்னை அதிகமாக நேசிக்கிறுயா? என் ஆட்டுக்குட்டிகளைமேய்ப்பாயாக" (அரு. 21 :15).

இறைவனுக்காக எதையும் பரித்தியாகம் செய்யும் விரிந்தஉள்ளம் தேவை. அனுதினவாழ்வில் அலையெனத் துன்பங்கள் திரண்டெழுந்து ஆட்டிவைத்தாலும் நிலைகுலையாது, மனந்தளராது தூய உள்ளத்தோடு அவற்றைத் தினம் தாங்கிச் செல்லும்சிந்தை வேண்டும்.




"என்னைப் பின்பற்றவிரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச்சுமந்து என்னைப் பின்தொடரட்டும்" (மத். 16 : 24).

**கிடைக்கும் சந்மானம்:**

பொன்னல்ல, வேறுபொருளல்ல; கால வெள்ளத்தால் கரைந்திடும் பேரல்ல, புகழல்ல ... இதோ கிறிஸ்துவே விளக்கமாக விளம்புகின்றார்:

"வீட்டையோ, சகோதர சகோதரியையோ, தாய் தந்தையையோ, மக்களையோ, நிலபுலங்களையோ என் பெயரின் பொருட்டுத் துறந்துவிடும் எவனும் நூறுமடங்கு பெறுவான். மறுமையில் முடிவில்லா வாழ்வையும் பெற்றுக்கொள்வான்" (மத். 19 : 29).

இளைஞனே!

இருள் என்ற திரை விலக உலகில் அருள் என்ற மழை பொழியச்செய்ய உனக்கோர் தெய்வீக அழைப்பு!

"என் பின்னே வா இனிமேல் உன்னை மனிதரைப் பிடிப்போனுக்குவேன்" (மாற். 1 : 17).

* நீ வாழ்க்கையின் ஆரம்பப் படியில் நிற்கிறுய்

* நீ நிறைவேற்றவேண்டிய தேவ நியமனம் ஒன்றுண்டு...

* ஆனல் எல்லாம் உன்னிலேயே தங்கியிருக்கிறது

* ஆகவே உனது வருங்கால வாழ்க்கைதான் என்னே

* இதைப்பற்றி எப்போதாகிலும் நீ சிந்தித்ததுண்டா?...

* தேவன் உன்னை அழைக்கிறார்

* நானு? .. ஆம் நீ தான்...

**இளைஞனே இன்னும் கேள்:**

* "கிறிஸ்தவமதம் உலகுக்கு அளித்துள்ள மாபெரும் மானிடருள் பிரான்சீஸ் அசீசியாரும் ஒருவர்"

— ஜவஹர்லால் நேரு.

* "இன்றே என் தவறை உணர்ந்தேன்; ரஷியாவுக்கு நான் அளித்திருக்க வேண்டியது ஒருடசின் அசீசிகளையே"

— லெனின்:

* "ஒவ்வொரு கிறிஸ்தவனும் புனித பிரான்சீஸ் அசீசியின் இரத்தத் துளிகளில் ஒரு துளி பெற்றிருந்தால் நாம் வாழும் வையகத்தையே உண்மையில் வளம்பெற்ற இன்ப நாடாக மாற்றுவேன்"

— பிரான்ஸ் நாட்டுப் பிரதமர்.
ஜோர்ஜ் கிளமன் சோ

* "இன்றைய உலகில் மறுபடியும் பிரான்சீஸ் அசீசியார் தோன்றவேண்டும்"

— 23-ம் அருளப்பர்.

* "அசீசி அண்ணலின் அடிச்சுவட்டை அதிபிரமாணிக்கமாய்ப் பின்பற்றுவதே பிறன்சிஸ்கன்சபையின் குறிக்கோள்"

— புனித 10-ம் பத்திநாதர்.

மகனே! நீ ஏன் பிறன்சிஸ்கன் சபையில் சேர்த்து உனது வீரம்நிறைந்த தியாக வாழ்வில் மறுபடியும் பார்புகழும் ஐந்துகாய வரம்பெற்ற புனித பிரான்சீஸ் அசீசியாரை இன்றைய உலகில் அதிலும் நம் ஈழநாட்டில் தோற்றுவிக்கக் கூடாது. புதுமை வள்ளலான புனித அந்தோனியார் பிரான்சீஸ் அசீசியின் சீடராக இருந்ததுபோல நீயும் ஏன் பிரான்சீசின் சீடனுக வரக்கூடாது?

விபரங்களுக்கு:

அதி சங். சிரேஷ்டாதிபர்;
பிறன்சீஸ்கன் ஆச்சிரமம,
மாத்தளை (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி
### ஆனி — 1970

| | | | |
|---|---|---|---|
| 21 | ஞாயிறு | வருடத்தின் 12-ம் ஞாயிறு | [ப] |
| 22 | திங்கள் | தினப் பூசை | [ப] |
| 23 | செவ்வாய் | ,, | [ப] |
| 24 | புதன் | புனித திருமுழுக்கு அருளப்பர் | [வெ] |
| 25 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 26 | வெள்ளி | ,, | [ப] |
| 27 | சனி | இரக்கத்தின் மாதா | [வெ] |

சத்தியவேத பாதுகாவலன்

# அன்பின் செயற்பாடு

திரு இருதயப் பக்தியைத் திருச்சபை வளர்த்து வருவதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று கிறிஸ்து நாதரின் அளவற்ற அன்பை நாம் உணரும்படி செய்வது, மற்றது அந்த அன்புக்கு ஒரு பிரதி அன்பை எம் உள்ளத்தில் ஊற்றெடுக்கச் செய்வது. கிறிஸ்துநாதர் எம்மீது கொண்ட அன்பைப்பற்றி எடுத்து விபரிக்கத் தேவையில்லை. ஆனால், அதில் சுட்டிக் காட்ட வேண்டியது ஒன்றுளது அதாவது, அந்த அன்பு அவரது செயல்களில் எவ்விதம் வெளியாயிற்று என்பதுதான். ஐயாயிரம் பேரைப் போஷித்த நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால், அவரது உள்ளத்தின் அன்பு எவ்விதம் பிறர் துன்பம் போக்கும் ஒரு கருணைச் செயலாகப் பரிணமித்தது என்பதைக் காணலாம். மக்களின் ஆன்மீக நன்மைகளை மட்டுமல்லாது அவர்களது சரீர நன்மைகளையும் தம் கருத்திற் கொண்டிருந்தார் என்பதை இதே அன்பின் செயல்பாட்டை இந்நிகழ்ச்சியும் இதுபோன்ற இன்னும் வேறு எத்தனையோ நிகழ்ச்சிகளும் எடுத்துக்காட்டுகின்றன. நோயாளிகள் அவரிடம் வந்தபோது அவர்களின் பிணிநீக்கி உடல் நலத்தை அளித்தார். குருடர், செவிடர், ஊமைகள் முதலிய குறைபாடு உள்ளவர்களுக்கு அக்குறையைத் தீர்த்து வைத்தார். தீண்டத் தகாதவர்களான குஷ்ட ரோகிகளுக்கு மீண்டும் மக்கள் நடுவிற் கூடிவாழும் பாக்கியத்தை அளித்தார். தம் அன்புக்குரியவரை இழந்து துயரக்கடலில் ஆழ்ந்திருந்தவர்கள்மேல் அனுதாபம் கொண்டு அவ்வுயிர்களை மீட்டுக் கொடுத்தார். இதுமட்டுமா? பாவச்சேற்றில் மூழ்கி மன அமைதியின்றித் தத்தளித்தவர்களுக்கு வெளிப்படையாகப் பாவமன்னிப்புக் கொடுத்து, மனச்சாந்தியை ஏற்படுத்தினர்

இத்தகைய பெருந்தன்மை அவர் மனிதனாக உலகில் வாழ்ந்தபோது மட்டுமல்ல, என்றுமே உள்ளதொன்றாகும் இன்றும் அவரது இதயம் ஒவ்வொரு தனி நபர்மீதும் அன்பைச் சொரிகின்றது, அவரது தனிப்பட்ட அன்புக்காக ஏங்குகின்றது.

தியாகத்தின் மூலமே அன்பு நிரூபிக்கப்படுகிறது. நாம் அனைவரும் இதை அறிவோம். கிறிஸ்துநாதர் எத்தகைய தியாகத்தின் மூலம் தமது அன்பை நிரூபித்தார் என்பதையும் அறிவோம். தன் நண்பனுக்காகத் தன் உயிரையே தத்தம் செய்வதைவிட மேலான அன்பை ஒருவன் காட்ட முடியாது.

திருஇருதயப் பக்திமூலம் அவரது அன்பின் மிகுதியை உணர்வதுடன் அதற்கு பிரதியன்பு செலுத்தவும் வேண்டும். அவரது முன்மாதிரியைப் பின்பற்றுவதே இதற்குச் சிறந்த வழியாகும். கிறிஸ்து நாதர் பிறர்மட்டில், விசேஷமாக ஏழைகள், பலவீனர் மட்டில காட்டிய கருணையை நாம் கண்டுபாவிக்க வேண்டும் பிறர் பசிகண்டு அவர் இரங்கியதுபோல் நாமும் இரங்கவேண்டும். பிறர் துன்பத்தில் அவர் கைகொடுத்ததுபோல நாமும் கைகொடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அவரது அன்பு, கிறிஸ்தவர்களில் பிரதிபலிக்க வேண்டும். அப்போதுதான் திரு இருதயநாதரில் நாம் கொண்டுள்ள பக்தி, செயல்மூலம் வெளிப்படும். அவர் எம்மிடம் அநேக காரியங்களைக் கேட்கிறார் அவற்றில் ஒன்றான நற்கிருத்தியங்களை, அன்புச் செயலை அவருக்கு அளிப்போமாக

# பதுவைப் பதியரும் நற்செய்தி ஏடுகளும்

கிறிஸ்துபெருமானின் போதனைகளையும் சாதனைகளையும் ஒருங்கு திரட்டிய தொகுப்பே நறசெய்திகளாகும். கிறிஸ்தவ உலகுக்கு உன்னதமான வழிகாட்டியாகத் திகழ்வது அது. பைபிள், விவிலியம், சுவிசேஷம் என்ற கலப்புச்சொற்களால் இதுகாலவரை தமிழ்கூறும் நல்லுலகில் அறியப்பட்டு இன்று தமிழ் மணங் கமழும் நல்ல செய்திகள் என்ற நாமத்தால் அழைக்கப்பட்டுவரும் புதிய ஏற்பாட்டை இதுகாலவரை கத்தோலிக்க உலகு ஓரளவு அலட்சியப்படுத்தியிருக்கிறது என்றால் அதில் தவறில்லை.

கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்கட்கு உள்ள சுவிசேஷ அறிவு நம்மிடையே கடந்த காலத்தில் இருந்திருக்கவில்லை என்பது யாவருமறிந்த உண்மை. 1962ஆம ஆண்டுவரை எட்டாம் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் கத்தோலிக்க மாணவரின் திருமறைப்பாட நூலாக மட்டுமே சுவிசேஷம் அறியப்பட்டுவந்துள்ளது. மறைந்த மாமுனிவர் அருளப்ப பாப்புவின் இரண்டாம் வத்திக்கான் சங்கம் நம் திருமறையில் புகுத்திய மறுமலர்ச்சியின்விளைவாக கிறிஸ்துவின் நல்ல செய்திகட்கு விடிவு காலம் தோன்றியது.

விவிலிய அறிவின் அவசியத்தை கற்தோலிக்க உலகு நன்குணர்ந்துகொண்டு பல்வேறு வழிவகைகளாலும் திருமறையங்கத்தவரிடையே இவ்வறிவைப் பரப்பி கிறிஸ்துவின் இலட்சியங்களை நிறைவேற்றுவதில் முனைந்துவருகின்றது.

பதுவைப்பதியரான அந்தோனி முனீந்திரரின் திருநாளை அண்மையில் கொண்டாடினோம். இப் பெருமகனாரின் பெயர் உலகம் முழுவதிலும் காணாமற் போன பொருளைக் காட்டிக்கொடுக்கும் துப்பறிபவராகவும், பலவேறு புதுமைகளையும் அருளிவரும் அற்புத வரத்தராகவுமே அறியப்பட்டுள்ளது. ஆயின், அந்தோனிமுனியோரைத் திருச்சபை சுவிசேஷ வல்லுனராகப் பாராட்டுவது அநேகருக்குத் தெரிந்திருக்காது.

புனிதரான பிரான்சிஸ்குவால் அடியிடப்பட்ட துறவிகள் சபையின் ஆரம்ப மாணவர்களுள் ஒருவரான அந்தோனியார் குருத்துவ பயிற்சியில் ஈடுபட்டிருந்தகாலையில் விவிலிய நூலாராய்ச்சியில் அதிக நேரத்தைச் செலவிட்டுவந்தாரென வரலாறுகள் கூறுகின்றன. தமது குருத்துவ அழைத்தலின் போது இணைபிரியாத தோழனாக சுவிசேஷத்தையே கைக்கொண்ட இப் பெருமகனார் தம் பரிசுத்த பாதையை அந்நூல் காட்டும் குறிக்கோள்களுக்கிணங்க வகுத்துக் கொண்டார்.

அவர் வகுத்த பாதை பின்வருமாறு:–

1. வறுமை நிலையில் வாழ்நாளைக் கழித்தல். 2. சுயநல மறுப்பு. 3. கிறிஸ்துவின் அடிச்சுவடுகளின்வழியே செல்லுதல்.

நற்செய்திகளை அடிக்கடி வாசித்து அவற்றினுள் பொதிந்துள்ள உண்மைகளை ஆராய்வது அந்தோனியாருக்கு மிகப்பிடித்தமான தொரு அலுவல். அப்போஸ்தலர்களைப் பின்பற்றி கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில்பணியாற்றப்புறப்படுமொவ்வொருவரும் கிறிஸ்துவின் கொள்கைகளை சந்தேகமற அறிந்திருக்கவேண்டும். அறிந்தால்மட்டும் போதாது. அவைகட்கிணங்க நடக்கவும் நடந்துகாட்டவும் தயாராயிருத்தல் வேண்டும். உலகில் உள்ள பெரியபெரிய வேத சாஸ்திரப் புத்தகங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்தது விவிலிய நூலே என இப் புனிதரின் அறிக்கை கூறுகின்றது.

— சாமுவேல் பெனடிக்ற் —

அமெரிக்க கர்தினால் குஷிங் ஆண்டகை அந்தோனி முனிவர்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் அவர் சுவிசேஷத்தின் பெட்டகமாய் இருந்தார் எனக் குறிப்பிட்டார். பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டிப்புரட்டி, நமதாண்டவரின்வழிகாட்டுதலின் குறிக்கோள்களைக்கண்டுபிடிப்பதில் அந்தோனியார்ஊக்கத்துடன் முயற்சிசெய்தார் என ஆண்டகை மேலும் கூறுகிறார்.

திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரியார் அந்தோனியாரை நன்கறிந்தவர். இப் புனிதருக்கு அர்ச்சியசிட்டபட்டமளிக்கும் பாக்கியமும் பெற்றவர், **எம்மால் நன்கறியப்பட்ட, எமது ஆத்மிக தோழனாகவிளங்கிய ஒருவரை புனிதர்களின் வரிசையில் சேர்க்கும் பேறு எமக்குக் கிடைத்துள்ளது. நாமறிந்தமட்டில் இவர் சுவிசேஷ அறிவில் வல்லுநராக விளங்கியிருந்தார்** என அவ் வைபவத்தின்போது திருத்தந்தை குறிப்பிட்டார்.

பிரபல மறையில் வல்லவரான தோமஸ் பிளாஸ்மன் அடிகளார் அந்தோனிமுனீந்திரரை விவிலியக் கலாநிதி எனப் போற்றுகின்றார். அந்தோனியார் பரிசுத்தம் பரிமளிக்கும் வாழ்க்கையை நடாத்தியமைக்கு இதுவே காரணமெனக் கூறும் இவ்வறிஞர் இவ்வர்ச்சியசிட்டரின் பிரசங்கங்களிலெல்லாம் சுவிசேஷ மேற்கோள்கள் தவறாது இடம்பெற்றன வென்று எடுத்தியம்புகிறார்.

அந்தோனியாரை வேத பாரகருள் ஒருவராகப் பிரகடனப்படுத்தியவர் அண்மையில் உயிர்நீத்த திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதரே. கத்தோலிக்கர்கள் நற்செய்தியில் போதிய அறிவு கொண்டிருத்தல் அவசியமென்பதை இவர் வலியுறுத்தியுள்ளார். தினசரி பதினைந்து நிமிடங்களாவது நாம் சுவிசேஷத்தில் ஒருபகுதியை வாசித்து அதைத் தியானிக்க வேண்டுமென்பது திருச்சபையன்னையின் விருப்பமாகும். நமதாண்டவரின் போதனை சாதனைகளின் அறிவையும் நோக்கங்களையும் நன்குணர்ந்துகொண்டு அந்தோனியார்போல பரலோக பாதைக்கு எம்மை நடத்திச்செல்ல தினசரி தவறாது நற்செய்திகளை வாசித்துப் பயனடைவோமாக.

## புதிய அரசாங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

**ரவை நல்குகின்றது. புதிய பிரதமர் நாட்டுக்குவிடுத்த செய்தியில் பாராட்டுக்குரிய ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்: சென்ற காலத்தில் நீங்கள் என்மீது எத்தகைய விருப்பு வெறுப்பு உடையவர்களாயிருப்பினும், வருங்காலத்தில் நாட்டின் நன்மையைக் கருதி, உங்கள் நல்மனதையும, புத்திமதியையும், பிரமாணிக்கத்தையும் தாருங்கள் என்கிறார். ஆகவே, இந்நாட்டு மேற்றிராணிமாராகிய நாம் எமது நாடு இன்று இருக்கும் இக்கட்டு நிறைந்த இக்காலத்தில், புதிய அரசாங்கம் திறமையுடன் செயலாற்றச் சகல கத்தோலிக்கரையும் செபித்துவரக் கேட்டுக்**

கொள்வதுடன் அதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டி நிற்கின்றோம்.

## வண. டோருச்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

யும் தாண்டி செபஸ்தியார் கோயிலை அடைவர். அங்கு சென்றவர்கள் ஒரு முழுமணிச் செபமாலையும் சொல்லி சின்னச் சிலுவைப்பாதையும் சுற்றி முடிந்தாலும் வண்டி வந்து கோயிலைச் சேராது. வண்டிச் சுணக்கத்தின் ரகசியம், படைத்தவருக்கும், அப்பாவுக்கும், சுவாமியாருக்கும் மாத்திரம் தெரியும்.

(தொடரும்)

● பிரித்தானியிலே அருணடெல – பிறிற்றன் மேற்றிராசனத்தின் துணை மேற்றிராணியாராக வண. மிக்கேல் போவென் சுவாமியார் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆண்டு ஆனிமீ 20ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று [illegible] "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தந்திதம்: 1876.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org